நாடாளுமன்றத் தொடர் இலக்கம்- 35

அமைச்சின் பெயர் அனார்த்த முகாமைத்துவ நிலையம், பாதுகாப்பு அமைச்சு

குழுவின் பரிந்துரை	எடுக்கப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலை
சுற்றாடல் அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தடன் இணைந்து இழப்பு மற்றும சேதநிதிக்கு விண்ணப்பிக்க தரவு வடிவங்களை சமர்ப்பிப்பதற்க்கான ஒருமுறையை உருவாக்க பரிந்துரைக்கப்படுகிறது.	தற்போது 2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் இன் கீழ் வழங்கப்பட்டுள்ள ஆணையைப்பின்பற்றி அனர்த்த முகாமைத்துவ நிலையம் அனர்த்த நிகழ்வுகள் தொடர்பான சேதங்கள் , இழப்பு தரவுகளை சேகரித்து சேமித்து வருகிறது. அனர்த்தங்களின் சேதங்கள் இழப்புக ள் மற்றும் காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய சேதங்கள் இழப்புக் கள் ஆகியவற்றிற்கிடையே வேறுபாடு இருப்பதால் இழப்பு மற்றும் நிபந்தனைகளின்கீழ் அறிவிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பின்பற்றி தரவுகளை சேகரிப்பதற்கான ஒரு முறையை வகுக்க சுற்றுச்சூழல் அமைச்சிடமிருந்து அனர்த முகாமைத்துவ நிலையம் வழிகாட்டுதலையும் ஆலோசனையையும் கோரியுள்ளது
சமநலவெவ அணையில் ஏற்பட்டுள்ள கசிவை முழுமையாக மதிப்பீடு செய்து கசிவை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு இதற்கான இடர் குறைப்புத்திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது சமநலவெவ கரையிலுள்ள நீர்நிலைகளின் அதிக அழுத்தம் காரணமாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட பல திருத்தங்கள் வெற்றியளிக்காதலால் கசிவை சரிசெய்வதற்க்கான எந்தவொரு நடவடிக்கையும் முழுமையான ஆய்விற்கு பின்னரே மேற்கொள்ளப்படவேண்டும்	இரத்தினபுரி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒருங்கிணைப்பு பிரிவு பாதிக்கப்படக் கூடிய கிராம அலுவலர் பிரிவுகழுக்கான தயார்நிலை முன் எச்சரிக்கை மற்றும் எதிர்பார்க்கப்படும் ஆபத்து குறித்த சமூக விழிப்புணர்வு போன்ற கட்டமைப்பு அல்லாத தணிப்பு நடவடிக்கைகளின் மூலம்இடர் குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது.
12 கிராம சேவகர் பிரிவுகளில் அண்ணளவாக 2000 குடும்பங்களைச் சேர்ந்த மக்களை ஏதேனும் ஆபத்து கசிவு போன்றவை ஏற்பட்டால் பாதிக்கும் என்பதோடு கிட்டத்தட்ட 3000 பயிரிடப்பட்ட நிலங்களையும் பாதிக்கும் என்பதால் சமநலவெவ அணைக்கட்டுப் பகுதியில் உள்ள மக்களை எந்த ஆபத்திலும் எச்சரிக்கும் வகையில் நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் எச்சரிக்கை முறையை செயல்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.	அனர்த்த முகாமைத்துவ நிலையம் கிராம அலுவலக மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ குழுக்ககளை நிறுவியுள்ளது. மேலும் இந்த குழுக்கள் சமநலவெவ அணை பொறியியாலளர் அலுவலகம் மற்றும் கல்தோட்ட காவல்துறையை இணைத்து சமூக அளவில் முன்னெச்சரிக்கை பரப்புரை பொறிமுறையையும் நிறுவியுள்ளது.

சமநலவெவ அணையில் ஏற்படும் கசிவை நிவர்த்தி செய்ய ஒரு விரிவான அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை உருவாக்க பரிந்துரைக்கப்படுகிறது. இது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களுக்கு தயாராவதற்கு சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.	பாதிக்கப்படக்கூடிய கிராம சேவக பிரிவுகளுக்கான ஆயத்தத் திட்டங்கள் மற்றும் முன்னெச்சரிக்கை குறித்த சமூக விழிப்புணர்வு , பாதுகாப்பு கருதி வெளியேற்றல் உள்ளிட்ட பதிலளிப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

ஒப்பமிடப்பட்டது
ரணில் விக்ரமசிங்க
பாதுகாப்பு அமைச்சர்